**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 112/2014**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : தெய்வம் | **Caste** | : | | |
| **Father's Name** | : பெரியசாமி | **Calling** | : | மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | |
| **Village** | : | **Religion** | : | | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **57/2025** | |
| | | **Dated** | : | **25.11.2025** | |

**25.11.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 **திரு.தெய்வம்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 14.05.2012ம் தேதி திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணியில்இருந்தபோது திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண். 252/2012 சட்டப்பிரிவுகள் 454, 380 இதச வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 22.30 மணிக்கு சாட்சிகள் பார்த்தசாரதி, கதிரேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார்செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று

வாக்குமூலம் பதிவுசெய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சாட்சிகள் தினகரன், காமுத்தாய், சேதுவிக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் வழக்குகோப்பை ஆய்வாளர் இளங்கோவன் ஜென்னிஸ் என்பவரிம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல,

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.25 04:11:56 +0530

Judicial Magistrate No.II
Dindigul.